1979 பிப்ரவரி 20]

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, வெட்டப்பட்ட வாய்க்காலின் மூலம் தண்ணீர் வர முடியாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியென்றால் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அப்படிப்பட்ட புகார் எதுவும் இதுவரையிலே அரசுக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லக்கூடிய புகார் இருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்து, சப்ளை வாய்க்காலின் மூலம் சரியாகத் தண்ணீர் போகவில்லை என்றால் சரியாகப் போகக்கூடிய நடவடிக்கை கூடிய சீக்கிரம் எடுக்கப் படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 117-ம், 118-ம் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டிருப்பதால் இரண்டு கேள்வி களையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம்.

சென்னை நகருக்குப் பால் விநியோகம்

* வினா எண். 117 திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை மாநகருக்கு பால் விநியோகம் செய்வதற் கென எவ்வளவு பாலிதீன் பை செலவாகும்?

(ஆ) அதற்காக ஆகும் செலவு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு?

(இ) இந்த நடப்பாண்டில் இதுவரை எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்பட்டது?

(ஈ) இவை யாரிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) ஒரு நாளைக்கு சராசரி 1,70,000 பாலிதீன் பைகள் உபயோகப்படுகின்றன.

(ஆ) ஆண்டொன்று ஆகும் செலவு சுமார் ரூபாய் 70 இலட்சம்.

(இ) நடப்பாண்டில் ஏப்ரல் 1978 முதல் ஆகஸ்ட் 15 வரை ஏறத்தாழ ரூ. 26 இலட்சம்.

(ஈ) கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி மூலமாக வாங்கப்படுகிறது.

1. யூனியன் கார்பைடு — பம்பாய்
2. தேவன் பிளாஸ்டிக்ஸ் — சென்னை
3. போலின் இன்டஸ்டிரீஸ் — சென்னை
4. வடேரா பிளாஸ்டிக்ஸ் — பெங்களூர்
5. புரோகிரெஸ்ஸிவ் பிளாஸ்டிக் — கல்கத்தா
6. மெட்டல் பாக்ஸ் கம்பெனி ஆப் இந்தியா